செய்தி குறிப்பு எண்.80 நாள்.23.8.2008

# பேருந்து கட்டணம் அதிகமாக வசூலிக்கப்படவில்லை

## போக்குவரத்துத் துறை அமைச்சர் கே.என். நேரு இந்து நாளிதழ் செய்திக்கு மறுப்பு 23.8.2008

காஞ்சிபுரத்திலிருந்து திருவண்ணாமலை சென்ற சிறப்புப் பேருந்தில் கூடுதலாகப் பயணக் கட்டணம் வசூலிக்கப்பட்டதாக திரு. எம். நீலகண்டன் என்ற பயணி கூறிய தகவலின் அடிப்படையில், 23.8.2008 அன்று "இந்து" ஆங்கில நாளிதழில் வெளியிடப்பட்டுள்ள செய்தி முற்றிலும் தவறானதாகும்.

காஞ்சிபுரத்திலிருந்து திருவண்ணாமலைக்கு வந்தவாசி, சேத்துப்பட்டு வழியாக இயக்கப்படும் பேருந்துகளில் 36 ரூபாயும், செய்யாறு – போளூர் வழியாக இயக்கப்படும் பேருந்துகளில் 40 ரூபாயும் பயணக் கட்டணமாக வசூலிக்கப் படுகிறது. இந்தக் கட்டணம் பௌர்ணமி தினம் உட்பட அனைத்து நாள்களிலும் ஒரே மாதிரியாகத்தான் வசூலிக்கப்படுகிறது.

கடந்த 16.8.2008 அன்று பௌர்ணமி தினத்தில் காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி–சேத்துப்பட்டு வழியாக திருவண்ணாமலைக்கு மொத்தம் இயக்கப்பட்ட 41 நடைகளில் 38 நடைகள் 36 ரூபாய் கட்டணத்தில் நேரிடையாகவே இயக்கப்பட்டுள்ளது. மற்ற 3 நடைகள் தென்னங்கூர் கோயிலுக்கு பக்தர்கள் செல்ல சிறப்புப் பேருந்தாக இயக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் – திருவண்ணாமலை பிரதான சாலையிலிருந்து உள்பக்கம் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் தென்னங்கூர் கோயில் உள்ளது. பௌர்ணமி தினத்தன்று இக்கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு வசதியாக, சிறப்புப் பேருந்தாக இயக்கப்பட்ட 3 நடைகளில் மட்டுமே தென்னங்கூர் உள்ளே சென்று வர நான்கு கிலோ மீட்டர் தூரத்திற்கு ஐந்து ரூபாயும், தென்னங்கூர் கோயிலில் பக்தர்கள் தரிசனத்திற்காக அங்கு அரைமணி நேரம்

**பேருந்தை நிறுத்தி இயக்குவதற்கு ஐந்து ரூபாயும் சேர்த்து மொத்தம் 46 ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.**

**இது பௌர்ணமி தினத்தில் தென்னங்கூர் கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் நன்மைக்காகவே இயக்கப்பட்ட சிறப்புப் பேருந்தாகும்.**

**எனவே கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறான தகவலாகும்.**

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசு, 2006 ஆம் ஆண்டு மே திங்களில் பொறுப்பேற்ற பிறகு இரண்டாண்டுகளில் தமிழகம் முழுவதும் 6,500 புதிய பேருந்துகளை இயக்கி, இந்த ஆண்டில் மேலும் 3500 புதிய பேருந்துகளை இயக்கிட ஆணையிட்டும், ஆயிரக்கணக்கான நடத்துநர்களையும், ஓட்டுநர்களையும் புதிதாக நியமனம் செய்தும், தேவைப்படும் தடங்களில் எல்லாம் புதிய பேருந்துகளை இயக்கியும் தமிழக மக்களுக்குப் போக்குவரத்து வசதிகளைத் தங்குதடையில்லாமல் நிறைவேற்றிவரும் வேளையில், வழக்கமான தடத்திலிருந்து பக்தர்கள் வசதிக்காக உள்புறத்தில் அமைந்துள்ள கோவிலுக்காக இயக்கப்பட்ட சிறப்புப் பேருந்துகளில் வசூலிக்கப்பட்ட நியாயமான கட்டணத்தைக் குறிப்பிட்டு, அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதுபோல் மிகைப்படுத்தி "இந்து" பத்திரிகை எழுதியிருப்பதில் சிறிதும் நியாயமில்லை.**

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.